மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; தலைவரவர்களே, பொதுவாக நில ஆர்ஜிதம் செய்கின்றபோது பல்வேறு நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வதால் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 91 ஏக்கர் நிலம் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களுக்கு ஈட்டுத் தொகை நிர்ணயிக்கிற ஏற்பாடு நடைபெற்று வருகின்றது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய், சுமார் 500 மனைகளுக்கும் 800 குடியிருப்புக்களுக்கும் அந்தப் பகுதியிலே கொடுக்கப்படும்.

(முற்பகல் 9–50)

திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதித் திட்டத்தைப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதுபோன்ற உத்தேசம் ஏதும் இல்லை.

குமரி மாவட்டத்தில் குடிசைகளை மாற்றி வீடு கட்டுவதற்கு ஒதுக்கிய தொகை.

60—(*வினா எண். 8985) திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் குடிசைகளை மாற்றி வீடு கட்டிக் கொடுப்பதற்காக இவ்வாண்டில் (1986-87) எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அது பற்றிய விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): குமரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோவில் நகரம், ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிற 43 நகரங்களில் ஒன்றாகத் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த நகரத்தில் வீடுகள் கட்டித் தரப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய திட்டங்களைப் பார்க்கும்போது மீனவர் பகுதிகளிலும், பனை ஏறும் தொழிலாளர்கள் வசிக்கும் குடிசைப் பகுதிகளிலும் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற வகையில், அதுவும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியத்தினுடைய பணிகளைப் பொறுத்த வரையில் ஏற்கனவே சென்னையிலேயும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலே மட்டும்தான் நடைபெற்று வருகிறது. இப்போது 43 நகரங்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் பணிகள் பரவலாக்கப்பட்டு இருக்கின்றன. கடலோரப் பகுதி மீனவர்களைப் பொறுத்த வரையில் அதற்கென்று தனியாக இலாக்காக்கள் இருக்கின்றன. அந்த இலாக்காக்களின் சார்பாக அவர்களுக்குக் கட்டித் தரப்படுகிறது. இப்போது நான் சொன்னது போல் சென்னை தவிர மற்றும் 43 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றன. அதிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோவிலும் வருகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் குடிசைகளை மாற்றி வீடுகள் கட்டிக் கொடுக்க எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? எந்த காலகட்டத்திற்குள்ளாக அது கட்டிமுடிக்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வீட்டிற்கு சுமார் 6,000 ரூபாய் வீதம்—ஏறக்குறைய 2,153 குடும்பங்கள் 8 குடிசைப் பகுதிகளில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுஇருக்கிறது. அந்த குடிசை வாழ் மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் குத்தாலத்தில் கிராமிய வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம்.

61—(*வினா எண். 10338) **திரு. பாப்பா சுப்பிரமணியன்,** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலத்தில் ஒரு கிராமிய வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்ட அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களைப் பிரித்து தாலுக்கா அளவிலான கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS